**தலைப்பு 221 - தொழில் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 யூலை 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணக் கணக்கின் மீதி, இறுதி திறைசேரி அறிக்கையை விட ரூபா 164,793 இனால் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக நிதி நிலைமைக்கூற்றில் முற்பணக் கணக்கு மீதி மற்றும் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 164,793 இனால் அதிகரித்துக் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டிக்கமைய கணக்குகள் தயாரிக்கக்கட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் கொள்வனவின் மூலம் கைப்பற்றப்பட்டிருந்த ரூபா 943,495,888 தொகையான நிகழ்ச்சித்திட்ட செலவினக் கூற்றில் அந்த பெறுமதி ரூபா 943,520,888 ஆக காணப்பட்டமையால், நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 25,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிகளுக்கமைய நிதியல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | பரீட்சை மீதிக்கமைய 2020ஆம் ஆண்டினுள் 3 செலவின விடயங்களின் பூர்த்தி செய்யப்படாத பணிகளின் செலவினம் ரூபா 940,730,168 ஆன போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பூர்த்தி செய்யப்படாத பணியாக காண்பிக்கப்பட்டிருந்த மீதி ரூபா 931,870,210 ஆனமையால் பூர்த்தி செய்யப்படாத பணியின் பெறுமதி ரூபா 8,859,958 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மேற்படி |
| (ஈ) | பரீட்சை மீதியின் பிரகாரம், 2 செலவின விடயங்களின் கீழ் இயந்திரங்கள் மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் சுவீகரிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,296,347 ஆன போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் இந்த செலவினம் ரூபா 9,936,879 ஆக ரூபா 8,640,532 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மேற்படி |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் திறைசேரியின் இறுதி அறிக்கையை ஒப்பிடும் போது, நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 857,773 இனால் குறைவாகவும், முற்பணக் கொடுப்பனவு ரூபா 693,030 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிகளுக்கமைய நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் நடைமுறை வேலையை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

#### 1.6.3.1 வருமானமல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வருமானமல்லாத பெறுவனவுகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதியின் பிரகாரம், வருமானமல்லாத பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 845,791,843 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 854,602,392 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 8,810,549 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. கடந் வருடத்தின் இறுதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த அந்த தொகை பொது வைப்புக் கணக்கினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள போது மீண்டும் ஏனைய வருமானப் பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த ரூபா 8,810,549 தொகை வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் இந்த தவறு நிகழ்ந்துள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொது உரிய மேற்பார்வையொன்று காணப்படுதல் வேண்டும். |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டுநிதி சீராக்கல் கணக்கின் முற்பண 'பீ' கணக்கின் வேறுபாடு ரூபா 11,592,029 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீதிகள் சீராக்கப்பட்டதன் பின்னர் அந்த வேறுபாடு ரூபா 11,448,604 ஆனமையால் ரூபா 143,425 இனால் அதிகரித்து சீராக்கல் கணக்கில் காண்பிக்கபபட்டிருந்தது. | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள வாறு நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏற்பட்டுள்ள வழுவின் காரணமாக கட்டுநிதி சீராக்கல் கணக்கினை தயாரிக்கும் போது இந்த தவறு நிகழ்ந்துள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டிக்கமைய கணக்குகள் தயாரிக்கக்கட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் 20 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 43,200,000 தொகையான மொத்த நிதியேற்பாட்டில் எஞ்சிய தொகையான ரூபா 16,274,745 அதாவது 37.6 சதவீதமாக காணப்பட்டதுடன், அது ஒவ்வொரு செலவின விடயங்களின் நிதியேற்பாட்டின் 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.<br>05 மூலதன செலவின விடயங்களுக்குரிய ரூபா 12,050,000 தொகையான மொத்த நிதியேற்பாட்டில் எஞ்சிய தொகையான ரூபா | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வருடம் முழுவதும் அவ்வப்போது அலுவலகம் மூடப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்தவாறு நிதியேற்பாட்டினை செலவிட முடியாதிருந்தது. | நி.பி. 50 இன் பிரகாரம், செலவின மதிப்பீடுகள் இயலுமான அளவில் நடைமுறைச் சாத்தியமமானதாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,940,647 ஆக காணப்பட்டதுடன், அது ஒவ்வொரு செலவின விடயங்களின் நிதியேற்பாட்டின் 25 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஆ) | 221-2-4-1-1404 ஆம் இலக்க செலவின விடயத்திற்கான தேறிய நிதியேற்பாடு ரூபா 65,300,000 இல் சேமிப்பு 51 சதவீதமான ரூபா 33,269,461 ஆக காணப்பட்டது. | கடந்த வருடத்தில் ஊழியர் நலன்புரி நிதியப் பிரிவின் சில பகுதிகளின் மெஹவர பியச கட்டிடத்திற்கு மாற்றப்படாமை குத்தகை வாடகை நிதியேற்பாடு எஞ்சுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. | நி.பி. 50 இன் பிரகாரம், செலவின மதிப்பீடுகள் இயலுமான அளவில் நடைமுறைச் சாத்தியமமானதாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்குரியதாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அறிக்கையின் பிரகாரம், ரூபா 83,004,986 ஆன பொறுப்புகள் கணக்குக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எமது திணைக்களத்தின் வலய, மாவட்ட, மாவட்ட கைத்தொழிற்சாலை பரீட்சிப்பு பொறியியலாளர் ஆகிய உப அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளிலிருந்து பொறுப்புகளாக இனங்காணப்பட்டு எமக்கு அறிக்கையிடப்பட்ட சில பொறுப்புகள் கொடுப்பனவு செலுத்துவதற்காக முன்வைக்கப்படாத காரணத்தால் இவ்வாறான வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | திணைக்களத்தினால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தீர்ப்பதற்குள்ள சரியான பொறுப்புகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,969,199 பெறுமதியான பொறுப்புகள் கணக்குக் கூற்றுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறைசேரியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எமது திணைக்களத்தின் வலய, மாவட்ட, மாவட்ட கைத்தொழிற்சாலை பரீட்சிப்பு பொறியியலாளர் ஆகிய உப அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளாக 96 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த 96 பிரிவுகளினுள் நிதியேற்பாட்டினைக் கட்டுப்படுத்தும் போது நடைமுறைச் சிக்கல்கள் பல எழுகின்றன. இதன் போது திறைசேரிக்கு தகவல் | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கும் திகதியளவில் இனங்காணப்படாத பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் திகதியளவில் அறிக்கையிடப்பட்டமையால் இந்த வேறுபாட்டினைக் காணக்கூடியதாக இருந்தது. | |
| (இ) | கணக்குகள் கூற்றில குறிப்பிடப்பட்ட 2 செலவின விடயங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 61,954 தொகையான பொறுப்புகள், பொறுப்புகள் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் பதிவேட்டில் தகவல்களை உள்ளடக்கும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக இந்த தவறு இடம்பெற்றுள்ளது. | மேற்படி |
| (ஈ) | செயற்திட்ட இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்ட 6 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புகள் ரூபா 2,368,236 இற்காக 2021ஆம் ஆண்டின் போது ரூபா 643,485 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 3 செலவின விடயங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 6,637,421 ஆன பொறுப்புகள் கணக்குக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ஏனைய பொறுக்க்களை செலுத்துவதற்காக முன்வைக்கப்படாமை அதற்கு காரணமாக காணப்பட்டது. ஊழியர் நலன்புரி நிதியக் கணக்கினை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கும் பொது இந்த பெறுமதி காசாக செலுத்தப்பட்டிராததுடன், அது காசு அடிப்படையில் தயாரிக்கப்படும் திணைக்களக் கணக்கில் செலுத்த வேண்டிய செலவினம் ஆகும். | மேற்படி |
| (உ) | 2017 ஏப்ரல் 27ஆந் திகதிய அரச கணக்குகள் 255/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05ஆம் பிரிவின் பிரகாரம், 2013ஆம் ஆண்டின் போது மேஹவர பியச கட்டிடத்தினை நிர்மாணித்தல் 2021ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் எஞ்சிய கடப்பாடுகளின் மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. 221-1-1-2104 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 704,900,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 66,598,182 எஞ்சியிருந்ததுடன், | இறுதிப் பட்டியல்கள் முன்வைக்கப்படாமையால் செலுத்த வேண்டிய பெறுமதியை சான்றுபடுத்த முடியாமையால் பொறுப்புகள் கடப்பாடுகள் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |

இறுதி பட்டியல் செலுத்த வேண்டிய பொறுப்புகளின் பெறுமதிகள் உரிய பொறுப்புகளின் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செயலற்ற கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 1,296,825 ஆக காணப்பட்டதுடன், அந்த கடன் மீதிகள் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பில் 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நி.பி.133 (6) (இ) பிரகாரம் செயற்படுவதுடடன், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பணிக்கொடை தற்போது தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றவாறு உள்ளதுடன், கடன் மீதியை தவணையாகவேனும் அறவிடுவதற்கு கடிதங்களின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் அந்த தவணைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் கடன் பதிவேடுகளை சரியாக பேணுவததற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | சேவையைக் கைவிட்டுச் சென்றிருந்த, சேவையிலிருந்து வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2 முதல் 5 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,114,219 ஆன கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ரூபா 25,000 தொகையினை விஞ்சாத கடன் மீதிகள் தொடர்பில் 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நி.பி.133 (6) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. மூன்று உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் பிணையாளர்களிடம் அறவிடப்பட்டவாறு உள்ளது. | மேற்படி |

**2.4 வைப்பு மீதிகள்**

வைப்பு மீதிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 02 வைப்புக் கணக்குகளின் மீதியானது ரூபா 862,823,135 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள், 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 405,374,480 ஆன மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 (2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்படக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடடன், உரிய மாவட்ட அலுவலகங்களால் கொடுப்பனவுகள் தாமதமாகும் வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது வைப்புக் கணக்கில் காணப்படும் மீதிகளை இனங்கண்டு தனிப்பட்ட கணக்குகளுக்கு தாமதமின்றி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

தன்மை தொடர்பில் காலத்திற்க காலம் மீளாய்வு செய்து, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கையொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை
.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதல் திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் 08 நிர்மாணப் பணிகளுக்காக ஆரம்பத்தில் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 120,239,994 கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | பாரிய ஒப்பந்தங்கள் தொடர்பில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பெறுகைகள் குழுவின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணம் விடுவிக்கப்படுகின்றது. இரு தரப்பினரிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாமையால் மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்தின் கோரிக்கைக்கமைய பணத்தை விடுவித்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிர்மாண ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டி, ICTAD நிபந்தனைகள் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த வருடம் முதல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு மாத்திரம் பணத்தை விடுவித்தல் இடம்பெறுவதுடன், எதிர்காலத்தில் காசோலைகள் வழங்கப்படாது என்பதுடன், நிதியேற்பாடுகளை விடுவித்தல் மாத்திரம் இடம்பெறும். | |
| (ஆ) | 2013ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு தொழில் திணைக்களத்தின் 25 நிர்மாணங்கள் மற்றும் மேம்படுத்தல் பணிகளுக்காக ரூபா 320,106,499 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2021 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 90 முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 41,519,249 தொகை அதாவது 13 சதவீதம் எஞ்சியிருந்தது. அந்த எஞ்சிய பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய பணம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வினவி மீண்டும் கட்டிடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்படும். நிதிப் பிரிவிடம் காணப்படும் தகவல்களின் சரியான தன்மை தொடர்பில் பரிசோதித்து, மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் கட்டிடப் பராமரிப்பு பிரிவின் பொறியியலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிதிப்பிரமாணம் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்வதற்கும், அது தொடர்பில் உரிய அறிக்கைகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பேணுவதற்கும், செயன்முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்வதும் குறித்த உத்தியோகத்தரின் பொறுப்பாகும். |
| (இ) | சியெரா ஜொயின்ட் வென்சருடன் 2013 ஒக்தோபர் 03அந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 36 மாதங்களில் மெஹவர பியச கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும், 2019 யூன் 26ஆந் திகதிய அமப/19/1638/101/046-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவீடு செய்தலின் கீழ் 2019 யூன் 30ஆந் திகதி வரையிலும் காலத்தை நீடிப்பு செசய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறான | கட்டிடங்கள் திணைக்கத்திடமிருந்து சான்றுபடுத்தலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதில் வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம், தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>கட்டிட மதிப்பீடுகளை தயாரிக்கும் போது முறையாக திட்டமிட்டு உரிய முறையில தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், உரிய திகதிக்கு முன்னர் இடைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தின் பணிகள் நிறைவடைந்திராததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிடையில் ரூபா 7,891 மில்லியனான மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 39.3 சதவீதம் அதாவது ரூபா 3,099 மில்லியன் தொகை ஆரம்ப மதிப்பீட்டில் தவிர்க்கப்பட்ட (Omissions) பணியாகவும், 39.6 சதவீதம் சேர்க்கப்பட்ட (Additions) மேலதிக பணியாகவும், 46ஆவது கொடுப்பனவுச் சான்றிதழுக்கு (payment certificate) உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த உருப்படிகளை இனங்காண தேவையான ஒப்பீட்டு அறிக்கைகள் (comparission sheet) கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இடைக் கொடுப்பனவுச் சான்றிதழ் (IPC) 13 இற்காக தாமதக் கட்டணமாக ரூபா 21,772,797 ஆன தொகை (VAT வரி உள்ளடங்களாக) 2020 திசெம்பர் 31ஆந் திகதி சியரா ஜொயின்ட் வென்சர் (Sierra Joint Venture) இற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டத்தின் செயன்முன்னேற்றம் 2020ஆம் ஆண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன், | 2020ஆம் ஆண்டின் போது கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக பெறுகைகள் திட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்த | ஆண்டினுள் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், செயன்முன்னேற்றத்தை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டினுள் பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 20,618,992 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | முடியாமைக்கு இது பிரதான காரணமாகும். பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த மாவட்ட அலுவலகங்களில் கோரப்பட்ட அத்தியாவசியமான பணிகள் என்பதால் அந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. | மீளாய்வு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஆ) | மெஹவர பியச கட்டிடத்தின் 12ஆம் தளம் முதல் 16ஆம் தளம் வரையிலும் இடைத் தடுப்புகளைப் பொருத்துவதற்கான ரூபா 135,300,000 ஆன கிரய மதிப்பீடு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிராததுடன், தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது பெறுகைகள் குழுவினால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு இந்த பணியை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் பந்திக்கு முரணாக மொத்தக் கிரய மதிப்பீடான ரூபா 135,300,000 முழுமையாக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2021 மார்ச் மாதம் வரையிலும் ஒப்பந்தத்தின் கீழான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டவட்மான பதிலொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்தங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிகள், ICTAD நிபந்தனைகள் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான தொழில் அலுவலகம் காணப்பட்ட 03 கட்டிடங்கள், அந்த அலுவலகம் புதிய கட்டிடங்களுக்கு கொண்டு | ஹம்பாந்தோட்டை பழைய தொழில் அலுவலக கட்டிடம் சுற்றுலா விடுதியொன்றாக மாற்றுவதற்கு தேவையான பணிகள் | அரசாங்க கட்டிடங்களை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மதிப்பீடு செய்யப்படாத |

| | | |
|---|---|---|
| செல்லப்பட்டமையால் 01 முதல் 09 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டன.<br><br>தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான 4 மாவட்ட அலுவலகங்கள் மற்றம் குருநாகலை மாவட்ட கைத்தொழில்சாலைகள் பரீட்சிப்பு பொறியியலாளர் அலுவலகத்தின் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. அவிஸ்ஸாவெல தொழில் அலுவலக கட்டிடத்தின் இரத்தினபுரி மாவட்ட கைத்தொழில்சாலைகள் பரீட்சிப்பு பொறியியலாளர் அலுவலம் தாபிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி தொழில் அலுவலக கட்டிடம் களஞ்சியப்படுத்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான தொழில் அலுவலகங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | கட்டிடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டானரொருவரின் உதவியுடன் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3,138 ஆன போதிலும், உள்ளபடியான பதவியணி 2,570 ஆனமையால் 568 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தொழில் ஆணையாளர் நாயகத்தின் பதிலின் பிரகாரம், 2021.04.30ஆந் திகதியில் உள்ளபடியான உள்ளபடியான பதவியணி 2,651 ஆக உள்ளதாகவும், வெற்றிடங்களின் எண்ணிக்கை 487 ஆக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2021 ஏப்ரல் 30ஆந் திகதியில் உள்ளபடியான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் எதிர்பார்த்த பணிப்பொறுப்பினை மிகவும் செயற்திறனாக செயலில் ஈடுபடுத்துவதற்கு இயலுமான வகையில் மனிதவளத்தினை உச்சமாகவும் செயற்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |